தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்
TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE
8வது கீழ்தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை–600 015.
8th Down Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet,
Chennai - 600 015.
Phone No. / தொலைபேசி எண். 044-24341251
Website : www.forests.tn.gov.in

# வனக்காவலர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்புதல்
# Direct Recruitment for the Post of Forest Watcher

(விளம்பர எண். 1/2019, நாள் : 07-03-2019 / அறிவிக்கை எண்-1).

**(Advertisement No.1 / 2019, dated 07.03.2019 / Notification No. 1)**

## விண்ணப்பிப்பது எப்படி
## HOW TO APPLY

**விண்ணப்பதாரர்கள் 20/07/2019 முதல் 10/08/2019 வரை இணையதளம் வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இதர முறைகளில் விண்ணப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

Candidates can apply online from **20.07.2019 to 10.08.2019** only and no other mode of application will be accepted.

## இணையதளம் வாயிலாக விண்ணபிப்பதற்கு முன் தேவையானவைகள்:
## Pre-Requisites for Applying Online

**இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்யும்போது கீழ்கண்டவற்றை தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.**

**Before applying online, candidates should—**

(i) கீழ்கண்டவற்றை ஸ்கேன் செய்து வைத்திருக்க வேண்டும்.
Scan their:

- மூன்று மாத காலத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படம் (**4.5 செமீ x 3.5 செ.மீ, JPG/JPEG** வடிவத்தில் **20-50 KB** அளவு) -
  photograph [4.5cm × 3.5cm, JPG/JPEG format of size 20 – 50 KB - Recent Photograph taken within last three months]
- கையொப்பம் (**JPG/JPEG** வடிவத்தில் **10-20KB** அளவு)
  signature [JPG/JPEG format of size 10 – 20 KB]
- கையினால் எழுதப்பட்ட உறுதிமொழி (கீழ்க்கண்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்)(அளவு **50-200KB - PDF** கோப்பு)

  a hand written declaration (text given below). (Size should be between 50 – 200 KB - PDF file)

உறுதிமொழி/ Declaration

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மை.இவ்விண்ணப்பத்தை பொறுத்தவரை எதுவும் மறைக்கப்படவில்லை.தேர்வுக்கு முன்போ அல்லது பிறகோ இவ்விவரங்கள் தவறு அல்லது உண்மைக்கு புறம்பானது அல்லது தகுதியின்மை என அறியும்பட்சத்தில் எனது விண்ணப்பம் தமிழ்நாடு வன சீருடைப்பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் நிராகரிக்கப்படும் என்பதற்கு உடன்படுகிறேன்.

I hereby declare that all the particulars furnished in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In the event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, my candidature is liable for rejection by the Tamil Nadu Forest Uniformed Services Recruitment Committee (TNFUSRC).

கையொப்பம் / Signature

(ii) கையொப்பம் பெரிய எழுத்துக்களில் இருந்தால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
**Signature in CAPITAL LETTERS will NOT be accepted**.

(iii) சாதிச் சான்றிதழ் (அளவு **50-500KB - PDF** கோப்பாக)
**Community certificate (Size should be between 50 – 500 KB - PDF file).**

(iv)தேவைப்படின் ஸ்கேன் செய்யப்பட்ட விளையாட்டுச்சான்று (அளவு-**50-500KB-PDF** கோப்பாக)
**Keep Sports quota certificate scanned if applicable. (Size should be between 50 – 500 KB - PDF file)**

**மேற்கண்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் வரையறுக்கப்பட்ட அளவில் உள்ளதா என உறுதி செய்து கொள்ள வேண்டும்.**
**Ensure that all the above scanned documents adhere to the required specifications.**

(v)தேர்வுக்கட்டணம் / உரிய சேவைக்கட்டணம் ஆகியவற்றை இணையதளம் வழியாக செலுத்துவதற்கு தேவையான விபரங்கள் / ஆவணங்கள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.
Keep the necessary details/documents ready to make **Online Payment** of the requisite application fee/ applicable service charges.

(vi)விண்ணப்பதாரர்கள் தங்களுக்கே உரிய நடப்பிலுள்ள தகுதியான மின்னஞ்சல் முகவரியினை தேர்வு நடைமுறைகள் முடியும் வரை உபயோகத்தில் வைத்திருக்க வேண்டும். தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்குழுமம் தேர்வு குறித்தான அழைப்பாணை போன்ற கடிதங்கள் விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். விண்ணப்பதாரர் எந்த சூழ்நிலையிலும் தனது மின்னஞ்சல் முகவரியினை மற்றவர்களுக்கு பகிரவோ / தெரிவிப்பதோ கூடாது. விண்ணப்பதாரர் தனக்கே உரிய தகுதியான மின்னஞ்சல் முகவரி கொண்டிருக்காவிடில், தேர்விற்கு

இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் முன்பே தனக்குரித்தான மின்னஞ்சல் முகவரியினை புதிதாக உருவாக்கிக்கொண்டு, அதனை நடப்பில் வைத்திருக்கவேண்டும். விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தனக்கே உரிய அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

Please have a valid personal email ID, which should be kept active till the completion of Recruitment Process. TNFUSRC may send call letters for the Examination etc. through the registered e-mail ID. Under no circumstances, a candidate should share with/mention e-mail ID to / of any other person. In case a candidate does not have a valid personal e-mail ID, the candidate should create a new e-mail ID before applying on-line and must maintain that email account. Mobile Number and email id have to be unique.

**Application Fees/ applicable service charges Payable from 20/07/2019 10am to 12/08/2019 5pm (Online payment), both dates inclusive, shall be as follows**

**தேர்வுக்கட்டணம் உரிய சேவை கட்டணம் உட்பட 20/07/2019 காலை 10 மணி முதல் 12/08/2019 மாலை 5 மணி வரை (இரு தேதிகளும் உட்பட) இணையதளம் வாயிலாக கீழ்கண்டவாறு செலுத்த வேண்டும்.**

- பிற்படுத்தப்பட்ட வகுப்பு / பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லிம்) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்பழங்குடியினர் / ஆதி திராவிடர்/ ஆதி திராவிடர் அருந்ததியர்/ பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை / முன்னாள் இராணுத்தினர் ஆகியோருக்கு கட்டணம் ஏதும் இல்லை.
  No fee for BC /BCM / MBC/ SC / SCA / ST /Destitute widow candidates / ex - servicemen
- மேற்குறிப்பிட்ட வகுப்புகளைச் சாராத இதர பிரிவினருக்கு ரூ.150/- தேர்வுக் கட்டணமாக செலுத்த வேண்டும்.
  Rs. 150 /- for all others

இணையதளம் வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்குரிய சேவைக் கட்டணங்களை விண்ணப்பதாரரே செலுத்த வேண்டும்.

Applicable service charges for Online Payment of application fees will have to be borne by the candidate.

## இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் நடைமுறை
**Procedure for applying online**

(1) **விண்ணப்பதாரர்கள் வனத்துறையின் வலைதளமான** www.forests.tn.gov.in **வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.**

Candidates should apply only through Online Mode in the Tamil Nadu Forest Department's Website www.forests.tn.gov.in

(2)விண்ணப்பதாரர்கள் "புதியதாக பதிவு செய்ய இங்கே சொடுக்கவும்" என்ற பொத்தானை அழுத்தி இணையதளம் வாயிலான படிவத்தில் கோரப்பட்டுள்ள அடிப்படை விபரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். அதன்பின் கணிணியால் தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச் சொல் ஆகிய விபரங்களை உருவாக்கப்பட்டு "நீங்கள் வெற்றிகரமாக பதிவு செய்துள்ளீர், உங்களது மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவலினை பார்க்கவும்" என

திரையில் வாசகம் தென்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச்சொல்லினை கண்டிப்பாக குறித்து வைத்துக்கொள்ளவேண்டும். தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச்சொல் ஆகியவை விண்ணப்பதாரர்களுக்குரிய மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் மூலம் அனுப்பி வைக்கப்படும். இந்த தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச்சொல்லைக்கொண்டு சேமிக்கப்பட்டுள்ள விபரங்களை மீளத் திறந்து பார்க்கவும் தேவைப்படின் விபரங்களை திருத்தம் செய்தும் கொள்ளலாம்.

Candidates will have to click on “CLICK HERE FOR NEW REGISTRATION” to register their application by entering their basic information in the online application form. After that a provisional registration number and password will be generated by the system and a message that “you are successfully registered and please check your e-mail and SMS” will be displayed on the screen. Candidate should note down the Provisional registration number and password. An Email & SMS indicating the Provisional Registration number and Password will also be sent. They can reopen the saved data using Provisional registration number and password and edit the particulars, if needed.

(3) விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்டவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

- புகைப்படம்
- கையொப்பம்
- கையினால் எழுதப்பட்ட உறுதிமொழி
- சாதிச்சான்று
- விளையாட்டு சான்று (தேவைப்படின்)

வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின்படி ஸ்கேன் செய்த ஆவணங்களை பதிவேற்றம் செய்யவேண்டும்.

Candidates are required to upload their

- Photograph
- Signature
- A hand written declaration
- Sports quota certificate (If required)

as per the specifications given in the Guidelines for Scanning and Upload of documents.

(4) விண்ணப்பதாரர்கள் இணையதளம் வாயிலாக பதிவு செய்த விபரங்களை மாற்றம் செய்வதற்கு சாத்தியமோ / அனுமதிக்கவோ இயலாது என்பதால் கவனமாக இணையதளம் வாயிலாக விபரங்களைப் பதியுமாறு தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் விபரங்களை சமர்ப்பிக்கும்முன் **"சேமிக்க மற்றும் அடுத்து"** என்று குறிப்பிட்டுள்ள வசதியினை உபயோகித்து பதிவுசெய்த விபரங்களை சரிபார்த்துக் கொள்ளவும், தேவைப்படின் திருத்தம் செய்து கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது. **"இறுதி சமர்ப்பி"** பொத்தானை அழுத்தி விபரங்கள் சேமித்த பின் பதிவு செய்த விபரங்களை மாறுதல் செய்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது

Candidates are advised to carefully fill in the online application themselves as no change in any of the data filled in the online application will be possible/ entertained. Prior to submission of the online application candidates are advised to use the “SAVE AND NEXT” facility to verify the details in the online application form and modify the same if required. No change is permitted after clicking on "FINAL SUBMIT" Button.

நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் / உரிய சேவைக்கட்டணம் ஆகியவற்றை இணையதளம் மற்றும் இணையவழி அல்லாத முறையில் செலுத்தலாம்.
Candidates have the option of making the payment of requisite fees/ applicable service charges through the ONLINE as well as OFFLINE mode:

இணையவழி அல்லாத முறையில் கட்டணம் செலுத்தும் முறையான கேட்புக்காசோலை / அஞ்சலக செலுத்துச்சீட்டு போன்றவை மூலம் செலுத்த அனுமதிக்கப்படமாட்டாது.
Offline mode of payment in any form such as Demand Draft / Postal order etc., will not be accepted.

(தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது தொடர்பான விபரங்கள் www.forests.tn.gov.in என்ற வலைதளம் மூலம் வெளியிடப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது).
(Details regarding Exemption for Examination Fee are given in “Information Brochure” published in the Website: www.forests.tn.gov.in).

**தேர்வுக்கட்டணம் / உரிய சேவைக்கட்டணங்கள் இணையதளம் வழியாக செலுத்துதல்**
**Payment of fees/ applicable service charges via the ONLINE MODE**

(i) விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை உரிய இடத்தில் மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்த பின் **"இறுதி சமர்ப்பி"** பொத்தானை அழுத்தி விண்ணப்பத்தினை சமப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **"இறுதி சமர்ப்பி"** பொத்தானை அழுத்தி விவரங்களை சமர்ப்பிக்கும் முன்னர் தாங்கள் அளித்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா என சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்களின் பெயர், அவர்களது தாய் / தந்தை பெயர் etc., ஆகியவற்றை சான்றிதழ்களில் / மதிப்பெண் பட்டியலில் உள்ளபடி மிகச்சரியாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி விவரங்களில் மாற்றங்கள் / திருத்தங்கள் ஏதுமிருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் ஒரே முறையில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய இயலவில்லை என்றால், தாங்கள் ஏற்கனவே பதிவேற்றம் செய்துள்ள தகவல்களை சேமிக்க இயலும். ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட தகவல்கள் சேமிக்கப்பட்டு அதன்பின் அவர்களுக்கான கணினியால் உருவாக்கப்பட்டுள்ள தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச் சொல் ஆகியவை ஒளித்திரையில் தென்படும்.
Candidates should carefully fill in the details in the On-Line Application at the appropriate places very carefully and click on the **“FINAL SUBMIT”** button at the end of the On-Line Application format. Before pressing the **“FINAL SUBMIT”** button, candidates are advised to verify every field filled in the application. The name of the candidate or candidate’s Father/Mother etc. should be spelt correctly in the application as it appears in the certificates/mark sheets. Any change/alteration found may disqualify the candidature. In case the candidate is unable to fill in the application form in one go, candidate can save the data already entered. When the data is saved, a provisional registration number and password will be generated by the system and displayed on the screen.

விண்ணப்பதாரர்கள் தங்களது தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றைக் குறித்துக்கொள்ள வேண்டும். மேலும் விண்ணப்பதாரருக்கு மின்னஞ்சல் மற்றும் கைப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி வழியாக தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச்சொல் அனுப்பப்படும். தேவை ஏற்படின் விண்ணப்பதாரர்கள் தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி விபரங்களை மாற்ற இயலும். முழுமையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்த பின்பு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

Candidate should note down the Provisional registration number and password. An Email & SMS indicating the Provisional Registration number and Password will also be sent. They can reopen the saved data using Provisional registration number and password and edit the particulars, if needed. Once the application is filled in completely, candidate should submit the data.

(ii) விண்ணப்ப படிவம் கட்டண நுழைவு வாயிலுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால் கீழ்க்கண்ட முறைகளில் கட்டணம் செலுத்தும் நடைமுறையினைப் பின்பற்ற வேண்டும்.

The application form is integrated with the payment gateway and the payment process can be completed by following the instructions.

(iii) திரையில் கேட்கப்படும் தகவல்களின் அடிப்படையில் விபரங்களை பதிந்து பற்று அட்டைகள் (RuPay/Visa/MasterCard/Maestro), கடன் அட்டைகள், இணையவங்கி சேவை, விரைவு பண சேவை, பண அட்டைகள் / அலைபேசி பணப் பரிவர்த்தனை போன்றவைகள் மூலம் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

The payment can be made by using Debit Cards (RuPay/Visa/MasterCard/Maestro), Credit Cards, Internet Banking, IMPS, Cash Cards/ Mobile Wallets by providing information as asked on the screen.

(iv) இறுதி சமர்ப்பித்தலுக்கு பின்பு விண்ணப்ப படிவத்திற்கான கூடுதல் பக்கம் திரையில் தென்படும். அந்த பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி கவனமாக தேவையான விபரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

After Final Submit, an additional page of the application form is displayed wherein candidates may follow the instructions and fill in the requisite details.

(v) இணையவழி கட்டணம் செலுத்தும் முறை வெற்றிகரமாக நிறைவு செய்யப்படவில்லை எனில் மீண்டும் உள்ளீடுக்கான தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றை பயன்படுத்தி விண்ணப்பக் கட்டணம் / உரிய சேவைக்கட்டணம் ஆகியவற்றை செலுத்தலாம்.

If the online transaction has not been successfully completed then candidates are advised to login again with their provisional registration number and password and pay the Examination Fees/ applicable service charges online.

(vi) வெற்றிகரமான பண பரிமாற்றத்துக்கு பின் மின்னணு-ரசீது கணினியால் உருவாக்கித் தரப்படும்.
On successful completion of the transaction, an e-receipt will be generated.

(vii)விண்ணப்பதாரர்கள் தேவையான மின்னணு-ரசீது மற்றும் விண்ணப்பபடிவம் ஆகியவற்றை நகல் எடுத்து வைத்துக்கொள்ளலாம். மின்னணு-ரசீது உருவாகவில்லை எனில் இணையவழி பணப் பரிமாற்றம் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.
Candidates are required to take a printout of the e-receipt and online application form. Please note that if the same cannot be generated then online transaction may not have been successful.

## குறிப்பு:-

- தேர்வுக் கட்டணம் செலுத்திய விவரங்களைப் பதிவு செய்த பின்னர் அதற்கான தகவல் திரையில் வரும் வரை காத்திருக்கவும். அதுவரை Back அல்லது Refresh ஆகியவற்றை சொடுக்க கூடாது. இல்லையெனில் பண பரிமாற்றம் இரண்டாம் முறையாக பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும்.
  After submitting your payment information in the online application form, lease wait for the intimation from the server, DO NOT press Back or Refresh button in order to avoid double charge.

- கடன் அட்டையினை உபயோகிப்போருக்கு: அனைத்துக்கட்டணங்களும் இந்திய ரூபாய் மதிப்பில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.ஒருவேளை வெளிநாட்டு கடன் அட்டை பயன்படுத்தப்பட்டிருப்பின், தங்களது வங்கி தற்போது நிலவும் (பணமதிப்பு) இந்திய ரூபாயின் மதிப்பில் பரிமாற்றம் செய்துகொள்ளும்.
- For Credit Card users: All charges are listed in Indian Rupee. If you use a non-Indian credit card, your bank will convert to your local currency based on prevailing exchange rates.

- பணப்பரிவர்த்தனை முடிந்தபின் உங்களது விபரங்களை பாதுகாக்கும் பொருட்டு வலைதள தொடர்பினை முறையாக முடிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளவும்.
  To ensure the security of your data, please close the browser window once your transaction is completed.

- இணையதளம் வழியாக விண்ணப்பித்தல் நடைமுறை, தேர்வுக்கட்டணம்/ உரிய சேவைக்கட்டணம் செலுத்துதல் உட்பட முடிவுற்றபின் கணிணியால் உருவாக்கப்பட்ட இணையதளம் வாயிலான விண்ணப்பப்டிவத்தினை நகலெடுத்து, அதில் பூர்த்தி செய்யப்பட்ட விபரங்கள் சரியாக உள்ளதா என உறுதி செய்துகொண்டு பதிவு எண் மற்றும் கடவுச்சொல் விபரங்களை எதிர்கால

தேவையின்பொருட்டு கவனமாக வைத்துக்கொள்ளவும். நகலெடுத்த விண்ணப்ப படிவத்தினை தமிழ்நாடு வன சீருடைப்பணியாளர்கள் தேர்வு குழுமத்திற்கோ / வங்கிக்கோ அனுப்பத்தேவையில்லை.

After completing the procedure of applying on-line including payment of fees / applicable service charges, the candidate should take a printout of the system generated on-line application form, ensure the particulars filled in are accurate and retain it along with Registration Number and Password for future reference. They should not send this printout to the TNFUSRC/ Banks

- இணையதளம் வழியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தில் அளிக்கப்பட்ட விபரங்களான விண்ணப்பதாரரின் பெயர், வகுப்பு , பிறந்த தேதி, முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, தேர்வு மையம், etc., போன்ற விபரங்களே இறுதியானது. இவ்விபரங்களை மாற்றவோ / திருத்தவோ வாய்பளிக்கப்படமாட்டாது என்பதால் இணையதளம் வழியாக பூர்த்திசெய்யும் விண்ணப்பத்தினை மிகவும் கவனமுடன் பூர்த்தி செய்யுமாறும் மாற்றம் செய்வது குறித்து எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

  Please note that all the particulars mentioned in the online application including Name of the Candidate, Category, Date of Birth, Address, Mobile Number, Email ID, Centre of Examination etc. will be considered as final and no change/modifications will be allowed after submission of the online application form. Candidates are hence advised to fill in the online application form with the utmost care as no correspondence regarding change of details will be entertained.

- இணையதளம் வாயிலான விண்ணப்ப படிவத்தில் தவறான தகவல்கள் அளித்தாலோ / முழுமையற்ற விபரங்களை அளித்தாலோ / தேவையான விபரங்களை அளிக்கத் தவறினாலோ அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தமிழ்நாடு வன சீருடப்பணியார்கள் தேர்வுக்குழுமம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.

  TNFUSRC will not be responsible for any consequences a rising out of furnishing of incorrect and incomplete details in the application or omission to provide the required details in the application form.

- இணையதளம் வாயிலான விண்ணப்பப் படிவம் அனுப்பும் போது உரிய அளவிலான புகைப்படம் / கையொப்பம் பதிவேற்றம் செய்யாமலிருந்தாலோ / வெற்றிகரமாக தேர்வுக்கட்டணம் அனுப்பப்படாமல் இருந்தாலோ அவ்வாறான விண்ணப்பங்கள் தகுதியானதாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

  An online application which is incomplete in any respect such as without proper passport size photograph and signature uploaded in the online application form/ unsuccessful fee payment will not be considered as valid.

- இணையதளம் வாயிலான விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசி நாட்களில் தமிழ்நாடு வன சீருடைப் பணியார்கள் தேர்வுக்குழும வலைத்தளத்தில் அதிகமான நபர்கள் ஒரே சமயத்தில் நாடுவதால் தேர்வுக்கட்டணம் / உரிய

சேவைக்கட்டணம் செலுத்துதல் போன்ற நிகழ்வின்போது ஏற்படும் இணைப்புத்துண்டித்தல் / விபரங்கள் அளிக்க இயலாத நிலை / தோல்வியடைதல் போன்ற அசாதாரணமான நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் இணையதளம் வாயிலான விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதிநாள் வரை காத்திருக்காமல் முன்னதாகவே இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க தெரிவிக்கப்படுகிறது.
Candidates are advised in their own interest to apply on-line much before the closing date and not to wait till the last date for depositing the fee / applicable service charges to avoid the possibility of disconnection/ inability/failure to log on to the TNFUSRC website on account of heavy load on internet/website jam.

- மேற்குறிப்பிட்ட காரணங்களால் குறிப்பிட்ட தேதிக்குள் விண்ணப்பிக்க இயலாமல் இருந்தாலோ அல்லது தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்குழுமத்தின் வரையறைக்குள் இல்லாத காரணங்களால் விண்ணப்பிக்க இயலாமல் இருந்தாலோ தமிழ்நாடு வன சீருடைப்பணியாளர்கள் தேர்வுக்குழுமம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
  TNFUSRC does not assume any responsibility for the candidates not being able to submit their applications within the last date on account of the aforesaid reasons or for any other reason beyond the control of the TNFUSRC.

- மேற்குறிப்பிட்ட நடைமுறைகளே இணையதளம் வாயிலாக விண்ணப்பிப்பதற்குரிய தகுதியான நடைமுறை ஆகும். இதர முறைகளில் விண்ணப்பித்தாலோ அல்லது தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ அவ்வாறான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
  Please note that the above procedure is the only valid procedure for applying. No other mode of application or incomplete steps would be accepted and such applications would be rejected.

- இணையதளம் வாயிலாக விண்ணப்பத்தில் அளிக்கப்படும் விபரங்களுக்கு விண்ணப்பதாரரே தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார். விண்ணப்ப படிவத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் / விபரங்கள் ஏதேனும் பின்னாளில் தவறானது என கண்டறியப்பட்டால் சட்டப்படியான / சிவில் சட்டப்படியான விளைவுகளை விண்ணப்பதாரர் எதிர்நோக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
  Any information submitted by the applicant in the application shall be binding on the candidate personally and the candidate shall be liable for prosecution/ civil consequences in case the information/ details furnished by the candidate are found to be false at a later stage.

Date: 12.07.2019

Member Secretary
TNFUSRC